# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## C.C. No.186/2022 P.W.7

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | அருள்தாஸ் | த-பெ | வேலு |
| ஊர்: | : | காரைக்குடி | | |
| வயது: | : | 55/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | முதன்மை குடிமை மருத்துவர் | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **29.04.2026.**

**எதிரி ஆஜர்.**

---------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து காரைக்குடி அரசு மருத்துவமனையில் முதன்மை குடிமை மருத்துவராக பணி செய்து வருகிறேன். கடந்த 2014 ம் வருடம் நான் காரைக்குடி அரசு மருத்துவமனையில் முதன்மை குடிமை மருத்துவராக பணியில் இருந்தேன். 19.01.2014 அன்று இரவு 11.45 மணியளவில் செம்பனூர் ஊரை சார்ந்த பாக்கியம் வயது 45 என்பவரை தன்னை இனம் தெரிந்த நபர் ஒருவர் தாக்கியதாகவும் மானபங்கம் செய்ததாகவும் பிடித்து இழுத்ததில் கீழ்தாடையில் இரண்டு பற்கள் விழுந்ததாகவும் கழுத்து பகுதியில் கீறல் ஏற்பட்டதாகவும் சொன்னார். அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்தேன். அவரை மேல் சிகிச்சைக்காக சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தேன். அங்கு அவர்கள் அவருக்கு ஏற்பட்ட பல் காயமானது புதிய காயம் அல்ல என்றும் அவருக்கு ஏற்பட்ட காயமானது சாதாரண வகையை சார்ந்தது என்று சான்று வழங்கினார்கள். மேற்படி மருத்துவர்கள் பரிந்துரையின் அடிப்படையில் அவருக்கு ஏற்பட்ட காயமானது சாதாரண வகையை சார்ந்தது என்று நான் சான்று வழங்கினேன். நான் வழங்கிய **காய சான்று அசாஆ 4.**

**குறுக்கு விசாரணை**

காயம்பட்ட நபர் ஆடு மாடுகள் மேய்க்கும்போது வயற்காட்டிலும் சிறு காடுகளிலும் ஆடு மாடுகளை விரட்டி செல்லும்போது தடுமாறி கீழே விழுந்தால் மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் பல் உடைந்தது பழைய காயம் எனவே கருத்துரை வழங்க இயலாது. கீறல் காயத்திற்கு வாய்ப்புள்ளது.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.05.05 16:47:10 +0530